


# மின்மினி



டிசம்பர் 2017 மின்னல் 01, கதிர் 04

## சங்கமம் தமிழ்ப்பள்ளி

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்" ... குறள்: 395

### நிகழ்வுகள்

**டிசம்பர் 23rd, 30th 2017**
பள்ளி விடுமுறை

### சிறப்புச் செய்திகள்

குழந்தைகள் தின விழாவினை முன்னிட்டு **வாஷிங்டன் தமிழ்ச்சங்கம்** நடத்திய மாறுவேடப் போட்டியில் **மழலை** வகுப்பில் படிக்கும் **சர்வேஷ் முதல் பரிசு** பெற்றார்.


**ஹார்வர்ட் தமிழ் இருக்கைக்கு** நமது **சங்கமம் பள்ளியின்** பெற்றோர்கள் பங்களிப்பாக **$2500** நன்கொடையாக கொடுக்கப்பட்டது.



**தமிழ்ப்பள்ளிக் குழந்தைகளின் பள்ளிகளின் சங்கமம், ஜனாதன் ரிப்ளே யுடன் ஒரு சந்திப்பு**



**கபிலன்:** நிலை நான்கு
**ஆசிரியர்கள்:** ஆர்த்தி, நீதி




**வாஷிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்** நடத்திய **'Why I study Tamil Language? Why I support Harvard Tamil Chair?** கட்டுரைப் போட்டியில் நமது பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு **'Harvard Tamil Chair'** வழங்கிய சான்றுதலைப் பெற்றார்கள்.

**ஜனாதன் ரிப்ளே** யுடன் அழகாக தமிழில் உரையாடி பல கேள்விகளைக் கேட்டு அசத்தினார்கள் நமது சிறார்கள்.

தமிழ்ப்பள்ளிக் குழந்தைகளின் **'பள்ளிகளின் சங்கமம்'** நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நமது பள்ளியின் பதாகையைப் பிடித்தவாறு **இப்படை தோற்பின் எப்படை வெல்லும்** என்று கோஷமிட்டு நமது பள்ளிக்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

**ஹார்வர்ட் தமிழ் இருக்கைக்கு** நன்கொடை கொடுத்த ஒவ்வொருவருக்கும் எமது பாராட்டுக்கள்



## எழுத்துப்படி வண்ணமிடுக!!!!

**தீரா**: நிலை ஒன்று

**ஆசிரியர்கள்:** ஹரிதா, நித்யா, தீபக்



**எங்க ஊர், தலையாட்டி பொம்மைக்கு பிரபலமானது. நானும் அந்த ஊர்க்காரன்தான். எந்த ஊர் சொல்லுங்க??**


A. தஞ்சாவூர்
Thanjavur

B. மானாமதுரை
Manamadurai

C. சேந்தமங்கலம்
Sendhamangalam

D. மதுரை
Madurai









## மீண்டும் அடுக்க உதவுங்கள்!!!

சிறார்களே, காய்கறி விற்கப் புறப்பட்ட தாத்தாவும், பழம் விற்கப் புறப்பட்ட பேரனும் பாவம் கீழே விழுந்துட்டாங்க. அவரவர் பொருட்களை கூடைகளில் அடுக்க, கோடுகள் வரைந்து அவர்களுக்கு உதவுங்கள் பார்க்கலாம்.



**ஐஸ்கிரீம் வேண்டாம் என்று யாராவது சொல்லுவீங்களா?? இல்லை இல்ல. அதனால இப்போ நமக்கு பிடிக்கும் ஐஸ்கிரீம்ம நாம வரைந்து பழகலாமா குட்டீஸ்??**





**கௌதம்:** நிலை மூன்று
**ஆசிரியர்கள்:** யோகி, சோபியா



## சொல்லு சொல்லு??

**அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம்**
**அது என்ன?**

**அறிவின் மறுபெயர் இரவில் வருவது**
**அது என்ன?**

**சாதனா:** நிலை 2B
**ஆசிரியர்கள்:** வெரோனிகா, கலைவாணி

**பச்சை பெட்டிக்குள் வெள்ளை முத்துக்கள்**
**நான் யார்?**

**உடல் சிகப்பு, வாய் அகலம், உணவு காகிதம்**
**நான் யார்?**

**நான் உயிருடன் இல்லை, ஆனால் ஐந்து விரல்கள்**
**நான் யார்?**



**ரோஹித் ரவி**
நிலை 2B

**ஆசிரியர்கள்**
வெரோனிகா,
கலைவாணி

## மிருகக்காட்சிச் சாலை




அட விலங்குகளைப் பார்க்கலாம் என்று மிருகக்காட்சிச் சாலைக்கு வந்தா ஒரு விலங்கையும் காணோமே. சரி வாங்க கேட்போம்.

இந்த மிருகக்காட்சிச் சாலையில் ஒரு வரிக்குதிரை, சிங்கம், ஒட்டகச்சிவிங்கி, மலைப்பாம்பு, பென்குயின் ஓரன்குட்டான் மற்றும் நெருப்புக்கோழியை காணோமாம்.

**கண்டுபிடிங்க பார்க்கலாம்!!!**



**சொல்லி சொல்லி பாருங்க, நாக்குக்கு கொஞ்சம் வேலை குடுங்க !!!**

ஆடுற கிளையில ஒரு கிளை தனிக்கிளை
தனிக்கிளை தனில் வந்த கனிகளும் இனிக்கலை

**தனிஷ்கா:** நிலை 2B
**ஆசிரியர்கள்:** கவிதா, அனித்தா






Thanksgiving டின்னெர்க்கு இலக்கியாவும், அகிலனும் கூப்பிட்டாங்க. சரி விருந்து சாப்பிடலாம் என்று அவங்க வீட்டுக்கு போனா முதல்ல ஆறு வித்தியாசத்தை கண்டுபிடிங்கனு சொல்லிட்டாங்க. எங்களுக்கு உதவி செய்யறீங்களா??


**ஆசிரியர்கள்:** மஞ்சு அய்யம்பாளையம், ரவி (மேல்நிலை வகுப்பு)





















**சென்ற இதழ் விடைகள்**



**குளிர் காலம் வந்தாச்சு சளியும் பிடிக்க ஆரம்பித்துவிட்டது. நான் குடுத்திருக்கும் மருத்துவ குறிப்புகளைப் பின்பற்றி சளியில் இருந்து தப்பித்துக்கொள்ளுங்கள்.**

**அக்க்ஷிதா:** நிலை நான்கு
**ஆசிரியர்கள்:** ஆர்த்தி, நீதி


① குளிர் காலத்தில் ஜலதோசம் வந்தால் உடல் நலம் காக்க வைட்டமின் சி நிறைந்த ஆரஞ்சு பழ வகைகளை உண்ண வேண்டும்.
② மிளகுத்தூள், மஞ்சள் தூள் ஒவ்வொன்றிலும் அரை தேக்கரண்டி சூடுபாலில் தேன் கலந்து சாப்பிட்டால் சளித் தொல்லையில் இருந்து விடுபடலாம்.
③ திரிபலா பொடி:- சிறியவர்கள் ½ தேக்கரண்டி, பெரியவர்கள் 1 தேக்கரண்டி சுடுநீரில் கலந்து இரவில் சாப்பிட்டால் நினைவாற்சக்திக்கும், ஜீரண சக்திக்கும் நன்கு உதவும்.

## மீநுண் தொழில்நுட்பம் (Nanotechnology)

சென்ஸார் எல்லா இடங்களிலும் உள்ளன! வீட்டில் பாதுகாப்பு கேமராக்களில், ஸ்மார்ட் தொலைபேசிகளில் சென்சார்கள் உள்ளன. சென்சார்கள் நம் அன்றாட வாழ்வில் ஒரு அங்கமாக உள்ளன. சென்சார் ஒரு சூழலின் மாற்றத்தை அடையாளம் காட்டுகிறது. சென்சாரை தமிழில் “உணர்வி” என்று சொல்லலாம். அறிவியலின் சமீபத்திய முன்னேற்றத்தினால் “உயிரியல் உணர்விகள்” (பயோலொஜிக்கல் செனசார்ஸ்) கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான உயிரியல் உணரிகள் நானோடெக்னாலஜி என்ற புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, ஃப்ளு மற்றும் சில வியாதிகளை ஒரு சில நொடிகளில் கண்டறியலாம். நானோடெக்னாலஜி மனித கண் பார்க்க முடியாது. ஒரு மீட்டரை பில்லியன் பங்காக பிரித்தால் அதுவே நானோவின் அளவு. உயிரியல் உணர்விகளில் அறிவியல் ஆராய்ச்சி எதிர்காலத்தில் புற்றுநோய் போன்ற நோய்களை சில நொடிகளில் அடையாளம் காணும். உணர்விகள் படிக்க ஆர்வம் இருந்தால் ஹை ஸ்கூலில் AP கணக்கு, AP வேதியியல், AP இயற்பியல் படிக்கவும்.

**அத்விகா:** நிலை நான்கு
**ஆசிரியர்கள்:** ஆர்த்தி, நீதி



உங்கள் குழந்தைகளுக்கு கட்டுரை அல்லது கதை எழுதுவதில் ஆர்வம் இருப்பின், அவர்களின் படைப்பை newsletter@sangamamtamilschool.org என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். குழந்தைகளின் படைப்பை ஆய்வு செய்த பின் அடுத்து வரும் **“மின்மினி”** செய்திமடல் பதிப்புகள் ஒன்றில், அவர்கள் கட்டுரையை மலரச் செய்வோம்.

# ஓவியப் போட்டி முடிவுகள்




| AGE GROUP | FIRST PRIZE | SECOND PRIZE |
|---|---|---|
| 4-5 Yrs | Darshini | Hasini |
| 6-7 Yrs | Adithi | Imaya |
| 8-9 Yrs | Nila | Harshad |
| 9-10 Yrs | Tejavi | Sarah Abdulkareem |
| 11-12 Yrs | Sakthi & Siddharth | - |
| 13 Yrs | Smeetha James | - |